# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, KARIAPATTI

Calender Miscellaneous **STC.No.408 /2025**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution

| | | |
|---|---|---|
| Name | : | **கருப்பையா** (Pw. ) |
| Father/Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 13th day November of 2025

( எதிரி ஆஜர்)

**முதல் விசாரணை:–**

நான் தற்போது ஆலத்தூரில் வசித்து வருகிறேன். நான் பொறியாளராக வேலை செய்து வருகிறேன். கடந்த 10.03.2019 ம் தேதி நான் காரியாபட்டிக்கு திருமணத்திற்கு கிப்ட் வாங்க வேண்டி தோணுகாலிருந்து மதுரை செல்ல TN 59 BR 0866 என்ற பதிவெண் கொண்ட டிவிஎஸ் இருசக்கர வாகனத்தை நான் ஓட்ட எனது நண்பர் திருப்பதி பின்னால் அமர்ந்து வந்தார். அப்போது செவல்பட்டி ஜங்சன் அருகே காலை சுமார் 8.30 மணியளவில் நான் வாகனத்தை இடது புரத்திலிருந்து திருப்பிய போது மறுபுரத்திலிருந்து வந்த TN 58 AB 9372 என்ற பதிவெண் கொண்ட மாருதி ஷிப்ட் டிசையர் கார் வேகமாக வந்து எனது வாகனத்தின் மீது மோதிவிட்டது. ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. விபத்தில் எனக்கு தலை, கை மற்றும் காலில் காயங்கள் ஏற்பட்டது.

எனது நண்பருக்கு வலது முழங்காலில் சவ்வு கிழிந்துவிட்டது. பின்னர் அக்கம் பக்கத்தினர் ஆம்புலன்சில் ஏற்றி காரியாபட்டி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். அன்றைய தினம் இரவு 10.00 மணியளவில் நான் சிகிச்சை பெற்று விடுவிக்கப்பட்டேன். எனது நண்பரும் இரவு 10.00 மணியளவில் நான் சிகிச்சை பெற்று விடுவிக்கப்பட்டார். ஆனால் அதன் பின்னரும் நாங்கள் மருத்துவமனையில் சிறிது காலம் சிகிச்சை பெற்றோம். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது அல்ல. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**(அரசு தரப்பில் சாட்சியை பகுதி பிறழ் சாட்சியாக பாவிக்ககோரி வேண்டுதல் செய்யப்பட்டு, அனுமதிக்கப்பட்டதின் பேரில் குறுக்குவிசாரணை செய்யப்படுகிறார்)**

**அ.த.கு.வி :-**

நான் போலீசார் விசாரணையின் போது ஆஜர் எதிரிதான் விபத்தை ஏற்படுத்தினார் என்று புகார் கொடுத்துவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :-**

சாலையை கடக்கும் போது நான் தான் கவனிக்காமல் மறுதிசையில் வந்த வாகனத்தின் மீது மோதிவிட்டேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாணை :-**

இல்லை.